**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 166** **நாள் : 10.07.2025**

**வளசரவாக்கம் மண்டலம், வார்டு-151க்குட்பட்ட எஸ்.வி.எஸ். நகர் குளத்தில் ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழைக்காலங்களில் சாலைகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேக்கத்தை தவிர்த்து மழைநீர் சேகரிக்கும் வகையிலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திடும் வகையிலும், மேலும் புதிய குளங்கள் உருவாக்குதல், நீர்நிலைகளை புனரமைத்து மேம்படுத்துதல், மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு நீர்நிலைகள் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள குளங்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளின் ஒரு பகுதியாக, வளசரவாக்கம் மண்டலம், வார்டு-151க்குட்பட்ட எஸ்.வி.எஸ். நகர் குளத்தில் ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்தக் குளமானது வளசரவாக்கத்தில் 4 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு நீர்ப்பிடிப்பு பகுதியாகும். இந்த நீர்ப்பிடிப்பு பகுதியைச் சுற்றியுள்ள சுப்ரமணிய சுவாமி நகர், ஜெய்நகர், அம்பேத்கர் தெரு ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காவண்ணம் பாதுகாக்கக்கூடிய ஒரு குளமாகும். 2023ஆம் ஆண்டு பருவமழையின் போது சுப்ரமணிய வெங்கடேஸ்வர சுவாமி நகரை உள்ளடக்கிய 13 தெருக்கள், ஜெய்நகரில் 2 தெருக்கள் மற்றும் ஸ்ரீராம் நகரில் 4 அடி வரை மழைநீர்த்தேக்கம் ஏற்பட்டது.

தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த சுமார் 4 ஏக்கர் பரப்பளவிலான இந்தக் குளம் 2024ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, மூடப்பட்டிருந்த குளத்தில் தூர்வாருதல், ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல் உள்ளிட்ட புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நீர்த்தேக்கத் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 2024ஆம் ஆண்டு பெய்த கனமழையின் போது இப்பகுதியில் மழைநீர்த்தேக்கம் இல்லை.

மேலும், இக்குளத்தை மேம்படுத்தி பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில், தற்போது ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் Toewall, Stone Stretching அமைக்கும் பணி, சுற்றுச்சுவர், நடைபாதை, பறவைகள் தீவு, திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், சிறுவர் விளையாட்டுத் திடல், திறந்தவெளி அரங்கம், படகுத் துறை, பூப்பந்து விளையாட்டுத்திடல், கழிப்பிடம், வாகனம் நிறுத்துமிடம் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் மற்றும் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு அம்சமாக உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்தக் குளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் புத்துயிர் காரணமாக குளங்களின் சேமிப்புத் திறன் அதிகரிக்கப்பட்டு, சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழைநீர் தேங்குவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும், நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக உயரும் நிலை உருவாகியுள்ளது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**